**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 210/2024**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துலட்சுமி | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | அர்ஜினன் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | மலையான்குளம் | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 17th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் மலையான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 26.08.2023ம் தேதி, சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எனது மகன் வெங்கடேஷ் வீட்டில் படுத்திருந்தான். எனது மகனின் நண்பர் மனோ என்பவர் எனது வீட்டிற்கு வந்தார். நான் அவனிடம் என் மகனை வெளியே அழைத்து செல்ல வேண்டாம் என்று கூறினேன். அதற்கு அவர் பக்கத்து இடத்திற்கு சென்று விட்டு மீண்டும் அழைத்து வருவேன் என்று சொல்லி எனது மகனை அழைத்து சென்று விட்டார். பின்னர், 11.30 மணியளவில் அ.சா.1 என்னிடம் வந்து எனது மகனை எதிரி அன்பரசன் பிடித்து வைத்திருப்பதாக சொன்னார். பின்னர், உடனே நானும், அ.சா.1ம், ராஜேஷிம் ஆகிய மூவரும் கலங்கல் என்ற ஊருக்கு சென்றோம். எங்களோடு இன்னொரு பைக்கில் மணிகண்டன், கார்த்திக் ஆகியோரும் வந்தார்கள். கலங்கல் பெட்ரோல் பல்க்கிலிருந்து மேற்கு பார்த்து செல்லும் பாதையில் அருகே ஒத்தையடி பாதையாக

செல்லும் ரோட்டில் எனது மகன் இரத்தக்காயத்தோடு இருந்தார். வீட்டுக்கு முன்னால் மாமரத்தில் கட்டி வைத்திருந்தார்கள். எதிரிகளிடம் எனது மகனை அவிழ்த்து விடுமாறு கெஞ்சினேன். அவர்கள் என்னை கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள். ஆயுதங்களால் தாக்க வந்தார்கள். எதிரி அன்பரசன், எனது மகன் வெங்கடேஷை அரிவாளால் வெட்டியதில் இடது கையின் 3 விரல்கள் துண்டித்து கீழே விழுந்தது. எதிரி அன்பரசன் அரிவாளால் எனது மகனை தலையை நோக்கி வெட்டியதில், அவர் விலகியதில் இடது கண்ணில் வெட்டு பட்டு, கண் போனது. எதிரி கனகராஜ் எனது மகனை தோள்பட்டையின் இடதுபக்கம் அரிவாளால் வெட்டி காயப்படுத்தினார். எதிரி அன்பரசன் மீண்டும் அரிவாளால் எனது மகனின் இடது முன்கையில் வெட்டியதில் இடது முன்கை துண்டாகி கீழே விழுந்து விட்டது. இவ்வளவு தாக்குதல்களும் என்னுடைய மகனை கட்டி வைத்து தான் செய்தார்கள். எதிரி முத்துமாரி கம்பியால் என் இடது தோள்பட்டையில் அடித்தார். காயம்பட்ட எனது மகனை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முற்பட்ட போது எதிரி அன்பரசன் மீண்டும் எங்களை தாக்க வந்தார். சம்பவமானது, மேலே நான் குறிப்பிட்ட சாட்சிகளுக்கு தெரியும். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றோம். அதன் பிறகு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னார்கள். நாங்கள் வண்ணாரப்பேட்டை காவேரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். ஒரு மணி நேரத்தில் கொண்டு சென்றால் தான் துண்டான கை சேர்க்க முடியும் என்று சொன்னதினால் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு போய் சிகிச்சை அளித்த பிறகும் கை ஒன்று சேரவில்லை. கண்ணில் ஏற்பட்ட காயத்திற்காக அகர்வால் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.

கருவிழி சிதைந்ததால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறினார்கள். அங்கு 15 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று பின்னர் வீட்டிற்கு அழைத்து வந்தோம். எதிரி அன்பரசின் உடன் பிறந்த தங்கை கவிக்குயிலை எனது மகன் காதலித்ததால் எதிரிகளுக்கு என் மகன் மீது விரோதம் இருந்தது. எனது மகனை எதிரிகள் தாக்கியபோது கவிக்குயில் அவர்களிடம் வெங்கடேஷை தாக்க வேண்டாம் என்றும், தவறு என் மேல் தான் உள்ளது என்றும் கூறினார். அவர் தடுக்கவும் வந்தார். அவரை தள்ளி விட்டு தான் என் மகனை எதிரிகள் வெட்டினார்கள். கவிக்குயில் சம்பவத்தை பார்த்து பயந்து அருகில் இருந்த கிணற்றில் குதித்தார். சம்பவம் சம்பந்தமாக எனது கொழுந்தன் ஸ்ரீதர் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

என்னுடைய சொந்த ஊர் மலையான்குளம், இந்திராகாலனி. மலையான்குளத்திற்கும், சம்பவயிடத்திற்கும் இடையே எத்தனை கி.மீ தூரம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பைக்கில் தான் செல்ல வேண்டும். 40 கி.மீ இருக்குமா? என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய மகனை ஆஜர் எதிரி தான் தாக்கினாரா? என்றால் எதிரி கனகராஜீம் தாக்கினார். (எதிரி அன்பரசன் ஆஜர்.). எதிரி அன்பரசனுக்கும், எனது பையனுக்கும் என்ன உறவு முறை என்றால் சொந்தக்காரர். என்னுடன் கொழுந்தனார் ஸ்ரீதர் அன்பரசன் வீட்டிற்கு வரவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மகன் வெங்கடேஷை அன்பரசன் கட்டி வைத்ததை தெரிந்து ஏன் காவல்நிலையம் செல்லவில்லை என்றால் கலங்கல் ஊரில் சென்ற பிறகு தான் என்னுடைய மகன் கட்டி வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. எங்களுக்கும், எதிரிக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்குதலை தடுத்தோமா? என்றால் தடுத்தோம். என்னுடைய உடம்பில் காயம் பட்டதா? என்றால் கம்பியால் தாக்கியதில் இரத்த உறை மட்டும் தான் ஏற்பட்டது. நான் மருத்துவ ஆவணங்களை புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை. என்னுடைய மகனை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் தான் எனக்கு இருந்ததொளிய என்னை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கவில்லை.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.18 18:43:43 +0530